**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 90/2015**

2023–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20–ஆம் நாள் திங்கள்கிழமை வா.சா.1. (1969–ஆம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பாலமுருகன், மூன்றாம் நிலை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாண்டியன் | சமயம் | : |
| த/பெ | : மணி | வயது | : |
| கிராமம் | : | தொழில் | : |
| வட்டம் | : | மாவட்டம் | : |

---

**வா.சா.1–ன் முதல் விசாரணை**

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். 29.12.1988 தேதியில் எனக்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ–1** ஆகவும், தாவா சொத்து குறித்து என் பெயரில் உள்ள பட்டா பாஸ்புத்தகம் **வா.சா.ஆ–2** ஆகவும், தாவா சொத்தை காட்டி எனக்கு கொடுக்கப்பட்ட விவசாய கடன் அட்டை **வா.சா.ஆ–3** ஆகவும், தாவா சொத்தைப் பொறுத்து என் பெயரில் உள்ள தீர்வை ரசீதுகள் (கோர்வை 3) **வா.சா.ஆ–4** ஆகவும், 20.01.2015 தேதியில் நான் தனிப்பட்டா கோரி ஜெயங்கொண்டம் வட்டாட்சியரிடம் கொடுத்த மனுவின் நகல் **வா.சா.ஆ–5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

ஒப்பம்/– திரு.ச.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல நீதிபதி,
ஜெயங்கொண்டம்.